Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 13

சனிக்கிழமை
09 டிசெம்பர் 2023

கார்த்திகை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054


முச்சந்தி முரளி



"அப்ப இனிமேல் சாமம் சாமமா குடியும் கும்மாளமுமா நாடு தள்ளாடப்போகுது கண்டியளோ"

பலாலி விமான நிலையத்தின்

# ஓடுபாதை அபிவிருத்தி; கைவிட்டதாம் இந்தியா!

தனியாரிடம் ஓடுகிறது அரசாங்கம்



**கொழும்பு, டிசெம்பர் 9**

**பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதை விரிவாக்கத்துக்கு 16 ஆயிரம் பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இந்திய அரசாங்கம் உதவியை வழங்கப்பின்னடிப்பதால், தனியார் நிறுவனங்களிடம் இருந்து முதலீட்டை கோருவது தொடர்பில் பரீசிலிக்கப் படுகின்றது என்று துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

11

வடக்கில் இனிமேல்

## இலத்திரனியல் மின்பட்டியல்!

கொழும்பு, டிசெ. 9

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில், அச்சிட்டு விநியோகிக்கப்படும் மின் பட்டியல் நிறுத்தப்படுவதாக இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதன்படி புதிய திட்டமாக இலத்திரனியல் மின்பட்டியல்

11

## மது விற்பனை நேரம் நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 9

டிசம்பர் 9ஆம் திகதி இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் மது பான விற்பனை நிலையங்களை திறக்கும் மற்றும் மூடும் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை உரிமத்தின் கீழ் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும்.

இதேவேளை - சுற்றுலாச்சபையால் அங்கீகரிக்கப்படாத, வளாகத்தில் மது அருந்துவதற்கான மதுபான விற்பனை நிலையங்கள் மு.ப. 10 மணி முதல் இரவு 11 மணி வரையும், சுற்றுலாச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட வளாகத்தில் மது அருந்துவதற்கான மதுபான விற்பனை நிலையங்கள் மு.ப. 10 மணி முதல் மதியம் 12 மணி வரையும் திறந்திருக்கும். சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்கள் (3 நட்சத்திரங்கள் மற்றும் அதற்கு மேல் உள்ள ஹோட்டல்கள்) மு.ப. 10 மணி முதல் அதிகாலை 2 மணி வரை திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## குழாய்க்கிணறுகள் யாழில் பூதாகரம்!

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழில் அதிகரிக்கும் குழாய்க் கிணறுகளால் நிலத்தடி நீர் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும், நாள் ஒன்றுக்கு எவ்வளவு நீர் வெளியேற்றப்படுகிறது என்பதைக்

10

வட்டு. இளைஞன் படுகொலை:

## அடையாள அணிவகுப்பில் நால்வரும் அடையாளம்!

யாழ்ப்பாணம், டிசெ. 9

வட்டுக்கோட்டை இளைஞர் படுகொலை வழக்கில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் வழக்கின் பிரதான சாட்சி நேற்று வெள்ளிக்கிழமை அடையாளம் காட்டினார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்றையதினம் விசாரணைகளுக்கு எடுத்துக்

10

இந்திய மீனவர்களின் அத்துமீறல்

## இந்தியத் தூதரகத்தை முற்றுகையிடுவோம்

யாழ். மீனவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 9

வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி அதிகரித்துள்ள நிலையில் விரைவில் யாழ்ப்பாணம் இந்தியத் தூதரகத்தை முற்றுகை

11

இலங்கைக் கடற்பரப்பில்

## இந்திய மீனவருக்கு அனுமதி; இன்னும் முடிவில்லை

அலி சப்ரி தெரிவிப்பு

11

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால்

## வடக்கு ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கம் தொடர்ந்து மிரட்டல்!

கொழும்பு, டிசெ. 9

ஊடகவியலாளர்களைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அழைத்து விசாரிப்பது நிறுத்தப்படவேண்டும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு;

'போர்க் காலத்தில் ஊடக நிறுவனங்கள்மீதும், ஊடகவியலாளர்கள்மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்து

11

## வடபகுதி ஊடகர்களை அச்சுறுத்தவில்லையாம்

சாந்த பண்டார தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 9

வடக்கில் உள்ள ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் அரசு செயற்படுகின்றது என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம் என்று

11

வடக்கில் பரவலாக

## நெற்பயிர்களில் நோய்த்தாக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

வடமாகாணத்தில் வெண்முதுகு தாவரத் தண்டு தத்தி மற்றும் கபிலநிறத்தத்தால் நெற்பயிர்கள் பாதிப்படைந்துள்ளன என்று விவசாயத்துறை அதிகாரிகள் உதயனுக்கு தெரிவித்தனர்.

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் தொடர்பில் எமக்குக் கற்பிக்க வேண்டாம்!

## கொதிக்கிறார் அலி சப்ரி

**கொழும்பு, டிசெ. 9**

**இலங்கையில் தமிழ் மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதை எமது அரசாங்கம் உறுதி செய்யும். காஸாவுக்கு எதிராக ஆயுதம் வழங்கும் நாடுகள் மனித உரிமைகள் தொடர்பில் எமக்கு கற்பிக்கத் தேவையில்லை என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்குள் மனித உரிமைகளை பாதுகாப்பதை நாம் பார்த்துக் கொள்கின்றோம். எம்மை விமர்சிக்கும் நாடுகளில் என்ன மனித உரிமைகள் இருகின்றன? காசாவில் 14 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதனை நிறுத்துமாறு கூறுகின்றார்களா? மாறாக ஜனாதிபதிகள் அங்கு சென்று ஆயுதங்களையும், நிதியையும் வழங்குகின்றார்கள். எனவே இவ்வாறான நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

எமது நாட்டிலுள்ள தமிழ் மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேவேளை பிரிவினைவாத நிலைப்பாடுகளுக்குள் செல்லவேண்டாம் என்று தற்போதுள்ள இளம் தலைமுறையினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்கிலாந்தில் ஹமாஸ் தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. ஆனால், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை கௌரவிக்கும் வகையில் நினைவேந்தல்கள் இடம்பெறுகின்றன. இது இரட்டை நிலைப்பாடில்லையா? எனவேதான் இவர்களின் கருத்துகளை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று குறிப்பிடுகின்றோம். (ம)

# பதவி விலகவேண்டும் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, டிசெ. 9

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிய ஆதாரங்களை நான் முன்வைத்துவிட்டேன். அவர் உடன்பதவிவிலகவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே.

'கலாசார நிதியத்தின் நிதி நிர்வாக சபையின் அனுமதி இன்றி 10 பில்லியன் ரூபா முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். மூவரடங்கிய நீதிபதிகள் குழு வழங்கிய ஆவணத்தில் கையொப்பம் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். ஆனால் கையொப்பம் உள்ளது. அதனை நான் சபையில் முன்வைக்கின்றேன். மூவரின் கையொப்பங்களும் உள்ளன. சஜித் பிரேமதாஸவின் மனைவியின் சலூனில் வேலை செய்வதற்கு, அரச பொறியியல் கூட்டுதாபனத்திலிருந்து ஊழியர்களை எடுத்துள்ளனர். அவர்களுக்கு அரச சம்பளமே சென்றுள்ளது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் இவ்விடயம் தெரியவந்துள்ளது. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவி விலகவேண்டும்' என நாடாளுமன்றில் நேற்றுக் கூறினார் மஹிந்தானந்த. (ஒ-44)

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, டிசெ. 9

புதிய மின்சாரசபைச் சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரத்துறை தொடர்பான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தத் தேவையான விதிமுறைகளை தயாரித்தல், அதற்காக தேசிய மின்சார ஆலோசனைக் குழுவை உருவாக்குதல் என்பன இந்தச் சட்டவரைவின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும் வர்த்தகத்துக்கான நிறுவனங்களை உருவாக்கவும் இதனூடாக முன்மொழியப்பட்டுள்ளது. (ஒ-இ)

## திருடன் மடக்கிப்பிடிப்பு

பளை, டிசெ. 9

அதிகாலைவேளையில் ஜன்னலைத் திறந்து வீட்டுக்குள் நுழைந்த திருடனை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் இளம்தம்பதியர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு பளை இந்திராபுரம் கிராமத்தில் இடம்பெற்றது.

குறித்த இளம்தம்பதியருக்கு சமுர்த்திக் கடன் நேற்று முன்தினம் கிடைத்திருந்தது. இதனை அறிந்த அயலவர் ஒருவரே அதிகாலைவேளை அந்த வீட்டினுள் புகுந்து பணத்தை எடுக்க முயன்றுள்ளார். இதனை தற்செயலாகக் கண்ணுற்ற இளம் தம்பதியினர் திருடனை மடக்கிப்பிடித்தனர். அதன் பின்னரே திருட வந்தவர் அயலவர் எனத் தெரியவந்தது. பின்னர் பொலிஸாருக்கு அறிவித்து திருடனை ஒப்படைத்தனர். (ஒ-9)

## 7 கோடி ரூபாவுடன் பேர் கைது

கொழும்பு, டிசெ. 9

கொழும்பின் முன்னணி ஹோட்டலொன்றுக்கு அருகாமையில் 7 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்துடன் இளைஞர்கள் 7 பேர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரகசியத் தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பயணித்த 2 கார்களும் துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

## கறுவா சீனாவுக்கு

கொழும்பு, டிசெ. 9

உள்நாட்டு கறுவாப்பட்டைக்கு சீனச் சந்தையில் அதிக கேள்வி நிலவுகின்றது. இதனால் வருடாந்தம் இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான கறுவாவை சீனாவுக்கு அடுத்த வருடத் தொடக்கத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக்க லிந்தர தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## நாளை போராட்டம்

சாவகச்சேரி, டிசெ. 9

குறுகிய காலத்துக்குள் ராஜபக்சக்களுக்குத் தீர்ப்பளித்த நீதித்துறை, சாட்சியங்களோடு உள்ள எம்மைக் கண்டுகொள்ளவில்லை. எமக்கான நீதியை வலியுறுத்தி சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை போராட்டத்துக்கு அழைப்பு விடுப்பதாக, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்களே காரணம் என இலங்கை நீதிமன்றம் மிகக்குறுகியகால விசாரணைகளின் ஊடாகத் தீர்ப்பளித்துள்ளது. நாங்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமைக்கும், கொடூரப் போரை முன்னெடுத்தார்கள் என்பதற்கும், காணாமல் ஆக்கச்செய்தார்கள் என்பதற்குமான பல சாட்சிகள் ஆதாரங்களுடன் உள்ளபோதிலும் எமக்கு நீதி வழங்க எந்த நீதிமன்றமும் முன்வரவில்லை.

இலங்கை அரசும், சர்வதேசமும் நீதியை வழங்க முன்வரவில்லை. இந்த நிலையிலேயே நாங்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை வடக்கு - கிழக்கு முழுவதும் போராட்டம் நடத்தவுள்ளோம் - என்றார். (ஒ-113)

# நெடுந்தீவுக்கு வருகிறேன்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 9

நெடுந்தீவுப் பகுதிக்கு விரைவில் வரவுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதியளித்தார்.

'நெடுந்தீவில் தனியார் பேருந்தும் இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் போக்குவரத்துச் சேவைகள் அந்த மக்களுக்குப் போதுமானது இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது' என அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

அமைச்சரின் கூற்றை மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நெடுந்தீவுப் பகுதி மக்கள் கடும் போக்குவரத்து நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகத் தெரிவித்தார். இந்தநிலையில், நெடுந்தீவுக்கு விரைவில் அவதானிப்புப் பயணத்தை மேற்கொள்வதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதியளித்தார்.

இதனிடையே, கடற்படையின் படகில் நெடுந்தீவுக்குப் பயணிக்கவேண்டாமெனவும் மக்கள் பயன்படுத்தும் படகில் பயணிக்கும் நிலையிலே அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்ளமுடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். (ஒ-இ)

## கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 9

ஊரெழுவில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்புடன் 39 வயதான இளைஞரைக் கைது செய்துள்ளதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-125)

ஊர்காவற்றுறை, டிசெ. 9

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னமடு, காரைநகர் பகுதிகளில் 19 மற்றும் 15 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதாகியுள்ளனர். (ஒ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகவியலாளர்கள் வாழ்வு பெரும் சிக்கல் நிலைக்குள்!

கொழும்பு, டிசெ. 9

**ஊடகவியலாளர்களுக்கு எவ்விதமான நலன்புரித் திட்டங்களும் தற்போது செயற்படுத்தப்படுவதில்லை. ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு அமைய ஊடகவியலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஊடகவியலாளர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமது தனிப்பட்ட தேவைகளைக்கூட நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாத அளவுக்கு ஊடகவியலாளர்களின் சம்பளம் குறைந்த மட்டத்தில் உள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு என்று கடந்த காலங்களில் 3 இலட்சம் ரூபா கடன் வசதி, மோட்டார் வாகனக் கொள்வனவுக்கு இலகு கடன், இலகு கடன் திட்டத்தில் வீடு, காப்புறுதித் திட்டம் என பல தரப்பட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், ஏதும் சாத்தியமடையவில்லை. ஊடகவியலாளர்கள் மாடி வீடுகளைக் கட்டுவதற்கும், சொத்து சேர்ப்பதற்கும் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரவில்லை. கௌரவமான முறையில் வாழவே உரிய சம்பளத்தை வழங்குமாறு கோருகிறார்கள் - என்றார். (அ-ம)

## டெங்கு நோயாளர்களால் நிரம்பிய மருத்துவமனை

பருத்தித்துறை, டிசெ. 9

வடமராட்சியில் டெங்கால் பாதிக்கப்படுபவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் கடந்த ஒருவாரத்தில் மட்டும் 37பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தரப்புத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் மருத்துவமனைக்கு வருவதனால் அங்குள்ள ஆண்கள், பெண்களுக்கான விடுதிகள் நிரம்பி வழி வதுடன், அங்குள்ள படுக்கைகள் முழுக் கொள்ளளவை எட்டியுள்ளன. அதனால் நோயாளர்கள் பலர் பல மணிநேரம் காத்திருந்து தரையில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். (ஓ-100)

## டெங்குத் தாக்கம் யாழில் உயர்வு

### சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். மாநகர பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரகாலத்தில் மாத்திரம் 5 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய டெங்கைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனைவிட குடியிருப்பாளர்களும் தமது குடியிருப்புச் சுற்றாடல்களில் நுளம்பு பெருகாத வண்ணம் துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவு கேட்டுள்ளது. (ச-17)

## பணப்பை ஒப்படைப்பு

பளை, டிசெ. 9

வீதியில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரை வீட்டுக்கு வரவழைத்து ஒப்படைத்தார் முதியவர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை இந்திராபுரத்தில் இடம்பெற்றது.

வீதியோரத்தில் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகில் பணப்பையை இந்திராபுரத்தைச் சேர்ந்தவர் கண்டெடுத்துள்ளார். பணப்பையிலிருந்த அலைபேசிக்கு அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்புக்கு பதிலளித்து வீட்டில் வந்து பணப்பையை பெற்றுக்கொள்ளுமாறு இந்திராபுரத்தைச் சேர்ந்தவர் கூறியுள்ளார். உரிமையாளர் அங்கு சென்று அதனைப் பெற்றுள்ளார். (ஓ-9)

## களை எடுக்கும் கருவி

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். மாவட்டத்தில் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 35 விவசாயிகளுக்கு மாவட்ட விவசாயப் பிரிவால் களை எடுக்கும் கருவி வழங்கப்படவுள்ளது.

2 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணத்துக்கு, விவசாயிகளிடமிருந்து அரைவாசிப் பணம் பெறப்பட்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார். (ஓ-125)

## சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, டிசெ. 9

சாந்தபுரத்தில் கடந்த 29ஆம் திகதி 43 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட சந்தேகத்தில் பெண் உள்ளிட்ட மூன்று பேரைக் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களின் வீட்டிலிருந்து ஒரு தொகை நகைகளும் ஏனைய நகைகள் தனியார் கடையில் அடைவு வைத்த நிலையிலும் மீட்கப்பட்டுள்ளன. (ஓ-113)

## குண்டு மீட்பு!

சாவகச்சேரி, டிசெ. 9


தண்ணீர்த் தாங்கி அமைக்க வெட்டிய குழியினுள்ளே வெடிக்காத நிலையில் குண்டு நேற்று மீட்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## தினம் தெரியுமோ?

இருக்க இடம் குடுத்தால் மடம் பிடிக்கிற வேலையை ஆமிக்காரர் வடிவாச் செய்யினம். இயக்கத்தோட சண்டை பிடிக்கவெண்டு வந்தவை, இப்ப இயக்கம் இல்லாமல்போய் பதினாலு வருசமாகியும் தாங்கள் இருந்த இடத்தை விட்டு எழும்ப மனமில்லாமல் இருக்கினம். அதைவிட அப்பாவிச் சனத்தின்ர காணி கட்டடங்களைப் பிடிச்சு வைச்சுக் கொண்டு, அதில ஹொட்டல் கட்டி வெளிநாட்டுக் காரரிட்ட டொலர் டொலராக் கறக்கினம். சனத்தின்ர தோட்டக்காணியைச் சுத்தி முள்ளுக்கம்பி வேலி போட்டிட்டு, உவையள் ஏக்கர் கணக்கில வெள்ளாமை செய்யினம். உலகத்திலயே தோட்டம் செய்து உழைக்கிறதுக்காக ஆமியை வைச்சிருக்கிற ஒரேநாடு இலங்கையைத்தான் இருக்கும். இப்பிடியெல்லாம் உழைச்சதுபோக, இப்ப இன்னொரு வழியிலையும் ஆமிக்காரர் உழைக்க வெளிக்கிட்டிட்டினமாம்.

காங்கேசன்துறைப் பக்கமா சனத்தின்ர சில காணியளையும், கட்டடங்கள் சிலதையும் கிட்டடியில விட்டவை. சிலதை விடாமல் வைச்சிருக்கினம். தையிட்டியில பொம்பிளை ஆமிக்காரர் ஒரு கட்டடத்தில முகாம் போட்டு இருந்தவை. அதைச் சுத்தி இன்னும் நாலைஞ்சு கட்டடங்களையும் அவையின்ர தேவைக்கு வைச்சிருந்தவை. இப்ப அந்த பொம்பிளை ஆமிக்காரர் அந்த முகாமை விட்டிட்டு, பலாலி முகாமுக்குள்ள போட்டினம். இப்ப இவையின்ர முகாம் இருந்த காணிக்குள்ள இருந்த கட்டடங்களுக்குள்ள ஆக்கள் ஆருமில்லை. அதோட அந்தக் காணியை, அதுக்கு உரித்தான சனத்திட்ட ஒப்படைக்கவும் இல்லை. இதை வைச்சு என்னெண்டு ஆமிக்காரர் உழைக்கினம் எண்டு யோசிப்பியள்?

அநேகமா ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பஸ்ஸுகளில தென்னிலங்கைப் பக்கத்தால ஆக்கள் ஊருக்கு வெளிக்கிட்டு இஞ்ச வாறதைக் கண்டிருப்பியள். அப்பிடி வாற சிங்கள ஆக்களுக்கு இந்த பொம்பிளை ஆமிக்காரர் முகாம் போட்டிருந்த கட்டடத்தை வாடகைக்கு குடுத்து நல்லா உழைக்கினமாம். இதுக்காகவே யாழ்ப்பாணத்திலயும் சில இடங்களில அவை தங்கட ஆக்களை வைச்சிருக்கினம். கொழும்பில இருந்து வாற சிங்கள ஆக்களிட்ட இவை போய் கதைச்சு, அவையை தையிட்டியில உள்ள இந்தக் கட்டடத்தில நல்ல மலிவான ரேட்டில தங்கலாம் எண்டு சொல்லிக் கூட்டிக் கொண்டு வருகினமாம். இதால ஒவ்வொருநாளும் ரண்டு, மூண்டு பஸ்ஸில ஆக்கள் அங்க வந்து தங்குகினமாம். அதோட அப்பிடி அங்க தங்கிறவையும் சும்மா இருக்கிறேலை. இரவிரவா ஒரே கூத்தும் கும்மாளமுமா அந்த இடமே அதிருதாம். தமிழ்ச் சனங்கள் தங்கட காணியை பறிகுடுத்திட்டு அதை மீட்க முடியாமல் தவிச்சுக் கொண்டிருக்க, அந்தக் காணியளுக்குள்ள இவையள் 'நாட்டின்ர பாதுகாப்பு'எண்டு சொல்லிக்கொண்டு, குதியம் குத்தி, காசு பாத்துக்கொண்டிருக்கினம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமத்தில் கொள்ளை 5 சந்தேகநபர்கள் கைது!

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி கிராமத்தில் கடந்த புதன்கிழமை இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதுடன், பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் மூவரை கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொடிகாமம்- தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் வெள்ளாம்போக்கட்டியில் உள்ள தனது வீடு நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞனை வழிமறித்த குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன், இளைஞனது வீட்டுக்கும் சென்று பெறுமதியான பொருள்களை அடித்து சேதப்படுத்தியதுடன் வீட்டில் வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் நகை ஆகியவற்றையும் கொள்ளையிட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-159)

# உயர்தர மாணவருக்கு விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 9

க.பொ.த. உயர்தர வரலாற்றுப்பாடப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தால் விசேட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

அதன்படி இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கில் க.பொ.த. உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவர்கள் பங்கேற்றுப் பயனுறுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

# கடற்கரையோரச் சுவீகரிப்பு: பொன்னாலையில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும், பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன உயிரிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ள நிலையில் அதனைக் கைவிடுமாறு வலியுறுத்தி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பொன்னாலைச் சந்தியில் கடற்றொழிலாளர்களும், பொதுமக்களும் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-66)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (ச-17)



# தனியிசையில் முதலிடம்

இலங்கை தேசிய கர்நாடக சங்கீதப் போட்டியில் யாழ்.இராமநாதன் கல்லூரி மாணவி தனுசியா தனியிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ரி)

# விண்ணப்பம் கோரல்

வவுனியா பல்கலைக்கழகத்தில் 6 மாத கால (வார இறுதிக் கற்கை) இதழியல் மற்றும் ஊடகக் கற்கை உயர்தரச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி எதிர்வரும் 30ஆம் திகதியாகும்.

இந்தக் கற்கைநெறிக்கான மேலதிக தகவல்களை www.vau.ac.lk எனும் பல்கலைக்கழக இணை யத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (ரி-75)

# கணபதி ஹோமம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் கணபதிஹோமம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து நண்பகல் மஹோற்சவ பூசையும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-17)

# க.பொ.த. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள்

**காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி**

ச.சஞ்சீவன் - 9ஏ, சி.அபிநயா - 8ஏ பி, செ.தர்சிகா - 8ஏ பி, இ.தமிழினி - 7ஏ 2பி, உ.தனுஜா - 7ஏ பி சி, ச.பவக்குமரன் - 6ஏ 2பி சி, லி.சரண்யா - 6ஏ பி 2சி, கோ.தர்சனா - 6ஏ பி 2சி, ப.லக்சன் - 6ஏ 3சி, ச.கோபிநாத் - 6ஏ பி சி எஸ், யோ.தனேசன் - 5ஏ 3பி சி, அ.திவாஜினி - 5ஏ 2பி 2சி, உ.சகானா - 5ஏ பி சி எஸ். (ரி)

# மஹோற்சவம்

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன் கிழமை முற்பகல் 10.30மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ரி-66-27)

# தரம் - 5 புலமைப்பரீட்சை பெறுபேறுகள்

**யாழ். சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை**

து.மோசியா - 155, ப.கம்சனா -145, த.யதுர்சன் - 140, செ.டக்சன் - 133, சு.கேருஷன் - 132, சி.சஞ்சை - 119. (ரி)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் திடீர் செலவுகள் ஏற்படும். காரியங்கள் அனுகூலமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**இடபம்:** குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பொறுமை மிக அவசியம். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரனையாக நடந்துகொள்ளவும். மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வருத்தங்கள் நீங்கி மகிழ்ச்சி பிறக்கும். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகள் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்லவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். இன்று நீங்கள் ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக இருக்கவும்.

**கும்பம்:** எதிலும் ஒரு பிடிப்பில்லாத மனநிலை ஏற்படக்கூடும். வழிபாட்டின் மூலம் தெளிவு பெற முயற்சிக்கவும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கக்கூடும். விட்டுக்கொடுத்துச் செல்லவும். காரியம் இழுபறியாகும்.

**மீனம்:** எந்த விஷயத்திலும் பொறுமையுடன் சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வீண்விவாதம் வேண்டாம். மனஅமைதி கிடைக்கும். நண்பர்களுக்காக செலவு செய்ய நேரிடும். பிணக்குகள் நீங்கும்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 10 . 1981



மறைவு 08 . 12 . 2023

**சின்னராசா கமலகுமார் (நிஷா)**

யாழ்ப்பாணம் அச்சுவேலி சங்கானை வீதி பத்தைமேனியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா கமலகுமார் நேற்று (08.12.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னராசா அவர்களின் அன்பு மகனும், திரு.நிமலகுமார் (UK), கௌசலா சர்மிளா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு.ஸ்ரீரஞ்சன் மற்றும் தி.சாந்தினிதேவி ஆகியோரின் பாசமிகு மச்சானும், செல்வி. மோதாயினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.12.2023 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் வீட்டில் (பத்தைமேனி, சங்கானை வீதி, அச்சுவேலியில்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி, பத்தைமேனி,
அச்சுவேலி.
076 219 8016, 077 3675 402

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# தீர்வு! தீர்வு!! தீர்வு!!!

நாடாளுமன்றத்தில் மீண்டும் அரசியல் தீர்வு தொடர்பான குரல்கள் ஒலித்திருக்கின்றன. அடிக்கடி இவ்வாறு பேசப்படுவது வழமை. ஆனால், அதை அர்த்த முள்ளதாக்குவதற்கான முயற்சிகள்தான் எடுக்கப்படுவதில்லை. ஒரு கோட்டைக் கீறிவிட்டு அதைச் சின்னக் கோடாக்குவதா அல்லது பெரிய கோடாக்குவதா என்பதை அதற்குப் பக்கத்தில் இன்னொரு கோட்டை வரைவதன் மூலம் தீர்மானிக்கலாம். இலங்கையின் ஆட்சியாளர்களும் இந்தத் தந்திரத்தையே அன்றிலிருந்து இன்றுவரை கைக் கொள்கிறார்கள். நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கு இன்னொரு பிரச்சினையை - சர்ச்சையை - உருவாக்குவார்கள். அதேபோல தற்போதைய பொருளாதார நெருக்கடி - ராஜபக்சக்களுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு - என்பவற்றையொட்டி தெற்கில் எழுந்துள்ள அலையை திசைதிருப்ப இப்போது புலிகளின் மீளுருவாக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பான கதைகள் பேசப்படத் தொடங்கியிருக்கின்றன. ஆனால், இவை ஒன்றும் இதய சுத்தியாகப் பேசப்படவில்லை என்பதே உண்மை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துகளைச் சுட்டிக்காட்டிப் பேசியிருந்தார். இந்த ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர், இலங்கையின் சுதந்திரநாளுக்கு முன்னதாக அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிட்ட சஜித், இந்த நாட்டின் ஆட்சியாளர்களாக யார் இருந்தாலும் அரசியல் தீர்வை உடனடியாக வழங்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளார். இதுதான் இவர்களது அரசியல் தீர்வின் மீதான அர்ப்பணிப்பு. அவர்களைப் பொறுத்தவரையில் தங்கள் அரசியல் தேவைக்காக அரசியல் தீர்வை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனரே தவிர அதை நடைமுறைப்படுத்த உருப்படியாக எதையும் செய்யப்போவதில்லை.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பன நடைபெறும் சாத்தியம் அதிகம் தென்படுவதால், தென்னிலங்கைக் கட்சிகளுக்கு இந்த நாட்டில் தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்பதும் அவர்களுக்கு அரசியல்தீர்வு வழங்கப்படவில்லை எனவும் இப்போதுதான் நினை வுக்குவரும். தேர்தல் வாக்குக்கு மாத்திரம்தான் தமிழர்கள் தேவைப்படுவார்கள். அதற்கான முன்னோட்டமாகக் கூட நாடாளுமன்றத்தில் மீண்டும் தீர்வு தொடர்பான கதையாடல்கள் அமைந்திருக்கலாம். போரின் பின்னரான அனைத்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள், தங்களுக்குத் தேவையான தலைவரைத் தெரிவுசெய்ய வாக்களிக்கவில்லை. மாறாக தமக்குப் பிடிக்காத, தமிழினத்துக்கு விரோதமான அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகவே குறித்த நபருக்கு எதிரானவரைத் தெரிவுசெய்தார்கள். ஆனால், தென்னிலங்கையின் தலைவர்கள் எல்லோரும் ஒருவர் கொழுக்கட்டை என்றால் மற்றையவர் மோதகம்தான். உள்ளுடல்கள் எப்போதும் ஒன்றுதான்.

இப்போது அரசியல் தீர்வைப்பற்றிப் பேசும் எந்தவொரு தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் அதை வழங்கப் போவதில்லை. ஆகக்குறைந்த அர்ப்பணிப்பை அவர்கள் வெளிப்படுத்தவும் போவதில்லை. காலத்தை இழுத்தடிப்பதுதான் நோக்கம். இப்போது அரசியல் தீர்வுக்காகக் குரல் எழுப்பும் தலைமுறை ஓய்ந்த பின்னர் அடுத்துவரும் தலைமுறை அதைப்பற்றிக் கேட்கப்போவதில்லை. இந்த நாட்டின் இளம்தலைமுறையைப் பொறுத்தவரையில் புலம்பெயர்தல் என்ற ஒன்றே நோக்கமாக இருக்கின்றது. இலங்கையின் ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் அதுதான். எனவே இப்போதுள்ள தலைவர்களுக்கு காலத்தைக் கடத்தினால் எந்தவொரு அரசியல் தீர்வும் வழங்காமலேயே இருந்துவிடலாம் என்று எண்ணுகின்றது. இப்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் அரசாங்கத்தின் இந்தச் சதித்திட்டத்தைப் புரியாதவர்களாக இருக்கமுடியாது. அவர்கள் தமது காலத்திலேயே நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு உழைக்க வேண்டும். அதைவிடுத்து தங்களுக்குள் குழிபறித்துக் கொண்டிருந்தால், எதிர்காலத்தில் இந்த நாட்டில் தமிழினம் என்ற ஒன்றே இருக்காது.




# இந்தியாவை பகைக்கக்கூடாது

## சித்தார்த்தன் எம்.பி. கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 9**

**இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் இலங்கையில் சீனாவின் செயற்பாடுகளை இலங்கை தடுக்கக் கூடிய வகையில் வெளியுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தவறுவோமேயானால் மிகவும் ஓர் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது. இந்தியாவுக்கு எதிராக சீனா இங்கு தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கின்றது. இந்த இரு நாடுகளையும் பகைக்காத வகையிலே இலங்கை நடந்துகொள்ள வேண்டும். அல்லாதுபோனால் அது நிச்சயமாக எங்கள் அனைவருக்குமே ஆபத்தாகமுடியும்.

வடக்கு - கிழக்கிலே வாழுகின்ற நாங்கள் மிகவும் அவதானமாக வாழவேண்டி இருக்கிறது. ஏனென்றால் சீனா, இந்தியா போன்ற வல்லாதிக்க சக்திகளுடைய பிரச்சினை எங்களை மிகவும் பாதித்துவிடும். இந்தியா அயல்நாடு. என்ன பிரச்சினை என்றாலும் உடனடியாக இந்தியா வருகின்றது. இதனால் நாங்கள் அவர்களை மேவாமலேயே சில விடயங்களைச் செய்யவேண்டியது கட்டாயம் - என்றார். (ஒ-இ)

# ராஜபக்ச என்னிடம் மன்னிப்புக்கோரவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. காட்டம்

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் அட்டூழியங்களை மூடிமறைக்கவே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச என் மீது கொலைக் குற்றச்சாட்டுகளை வைத்துள்ளார். என் மீது பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நீதி அமைச்சர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரி பதவியிலிருந்து விலக வேண் டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# 30 ஆயிரம் கிலோ சீனி தரமற்றது

கொழும்பு, டிசெ. 9

வடக்கு மாகாணத்துக்கு 80 ஆயிரம் கிலோ சீனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்ட நிலையில் 30 ஆயிரம் கிலோ சீனி தரமற்றது என்பதால் அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

# மீளத்திறப்பு

கொழும்பு, டிசெ. 9

அண்மையில் சில காரணிகளால் மூடப்பட்டிருந்த களனிப் பல்கலைக்கழகம் மீண்டும் நாளைமறுதினம் 11ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# ஒட்டகச்சிவிங்கி உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 9

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையிலிருந்த 30 வயதான ஒட்டகச்சிவிங்கி உயிரிழந்துள்ள நிலையில், அதன் உயிரிழப்புக்கான காரணம் வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் உரிய விசாரணைகளை விரைவில் முன்னெடுக்கவேண்டும் எனவும் தேசிய விலங்கியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# புறக்கணிப்பு

ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்கம் நாளை மாலை 4 மணி முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் மீண்டும் அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளது. (ஒ-இ)

## நாளை

10.12.2023

ஞாயிற்றுக்கிழமை

கார்த்திகை - 24

சுபநேரம் : 09.19 - 10.49

ராகுகாலம் : 04.49 - 06.19

பிரதோஷ விரதம்

## நாளொரு நல்வார்த்தை

தைரியம் மற்றும் நம்பிக்கையுடைய ஒருவர், ஒருபோதும் துன்பத்தால் அழிந்துவிடுவதில்லை.

– ஆன் ஃபிராங்க் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காதேவி ஆலய குறுஞ்செய்திச் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 9

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தால் குறுந்தகவல் செய்திச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கையிலேயே முதன்முறையாக இந்தச் செய்திச் சேவையை ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைத்தார். இதன்போது தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தால் ஆற்றப்பட்டுவரும் பல்வேறு சமூக நலத்திட்டப்பணிகள், விசேட உற்சவங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய முழுமையான விவரங்களை அடியவர்கள் இனி நேரடியாகக் குறுந்தகவல் மூலம் எவ்வித கட்டணங்களும் இன்றி பெற்றுக் கொள்ளமுடியும். (ச-66,27)

# தடையை நீக்குங்கள்


## செல்வம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 9

புலம்பெயர் அமைப்புகள்மீதான தடையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வெளி விவகாரக் கொள்கையின்போது இந்தியாவுக்கு இலங்கை முன்னுரிமை வழங்கவேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்த தாவது:-

சீனக் கப்பல்களின் வருகை அதிகரித்துள்ளது. இந்தியாதான் எமது அயல்நாடு. நெருக்கடிகளின்போது முதலில் கை கொடுத்த நாடு. எனவே, அந்நாட்டுடனான உறவு முக்கியம். அதன் பாதுகாப்பும் மிக அவசியம். எனவே, வீண் சர்ச்சைகளில் சிக்கும் செயலை தவிர்த்துக்கொண்டால் நல்லது. வெளிநாட்டில் உள்ள அமைப்புகள்மீது தடை விதிக்கப்பட்டுள்ளன. உரிய வகையில் ஆராய்ந்து தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ-44)



# இரணைமடு நீர் உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 9

தொடர்ச்சியான கனமழை காரணமாக கனகராயன் ஆற்றின் தொடக்கமாக சேமமடுக்குளம் வான்பாய ஆரம்பித்துள்ளதால் கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

தற்போது இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 27அடி 10அங்குலமாகக் காணப்படுவதுடன் மொத்தக் கொள்ளளவு 36அடி யாகக் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-75)



**பரிசில் நிகழ்வும் இதழ் வெளியீடும்**

வவுனியா, டிசெ. 9

பரிசளிப்பு நிகழ்வும் 'செங்கலம்' இதழ் வெளியீடும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெங்கலச்செட்டிகுள பிரதேச சபை செயலாளர் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக செட்டிகுளம் உதவிப் பிரதேச செயலாளரும், சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சிப் பிரதி ஆணையாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-75)

# கண்ணீர் அஞ்சலி

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் கடமை புரியும் **திருமதி. பகீரதி அகிலநாத்** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் கதிரவேலு பஞ்சலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

**முகாமையாளரும், ஊழியர்களும்**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**சுன்னாகம்.**

# பகிரங்க அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை (காங்கேசன்துறை) 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் (வரைபு) பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைபு)1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டப்பிரிவு 168க்கமைய தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் கருத்தாய்வுக்காக 2023.12.09 ஆம் திகதியிலிருந்து 2023.12.18ஆம் திகதி வரை வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொதுநூலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பாதீட்டில் 2024ஆம் ஆண்டில் சேகரிக்கக்கூடிய வருமானங்கள், செலவின விடயப் பரப்புக்கள் சம்மந்தமாகவும் எதிர்வரும் ஆண்டில் மேற் கொள்ளப்படவுள்ளதும் ஏற்கனவே தங்களின் முன்மொழியப்பட்டதுமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளக்கப்பட்டுள்ளது. கருத்துக்கள் ஏதும் இருப்பின் 2023.12.18 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக தெரிவிக்க முடியும் என்பதை இத்தால் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

தபால் முகவரி: செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை,
கொல்லங்கலட்டி.
மின்னஞ்சல்: vnpskks@yahoo.com
தொலைபேசி இல:021-2241130

சு.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை.
2023.12.09

(CS 41169) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 09 . 1942



மறைவு 05 . 12 . 2023

**பாலதேவி சின்னையா**
**BSC (Hons) Madrass University**

நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலதேவி சின்னையா அவர்கள் 05.12.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஆசிரியர்) நாகம்மா (ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையா (Deport Inspector -SLTB Srilanka) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசிவம், பாலமனோகரன் மற்றும் பாலநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, ஆச்சிமுத்து ஆகியோரின் மைத்துனியும், றாதை (ஆசிரியை C/PRESBYTERIAN SCHOOL COLOMBO-10), றஜீத்தா, றமணன், றவீத்தா ஆகியோரின் தாயாரும், அரியசோதி அவர்களின் மைத்துனியும், கீர்த்தனா, பானுஷா, விதுஷன் மற்றும் காலஞ்சென்ற விக்னா ஆகியோரின அன்பு மாமியும், விமல்ராஜ், நிரோஷனி, ராஜேந்திரா ஆகியோரின் மாமியும், சஜன், சர்வின், கானவி, கௌரவ், திவ்யா, பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தேவாலய வீதி,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**
**றாதை - 0094776038822**
**றஜீத்தா - 00447930639797**
**றமணன் - 00447950866103**
**றவீத்தா - 0044743821568**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 27313) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1934



மறைவு 07 . 12 . 2023

### புஸ்பவதி முருகேசு

கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட புஸ்பவதி முருகேசு அவர்கள் கடந்த (07.12.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர் காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னர் முருகேசு (நயினாதீவு) அவர்களின் அன்பு மனைவியும், சுரேஸ்குமார் (ஜேர்மனி), சசிகலா (கனடா), சிவகுமார் (சுவிஸ்), சந்திரகலா (இலங்கை), காலஞ்சென்ற சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயா (ஜேர்மன்), விநாயகப்பெருமான் (கனடா), விமலேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற சத்தியவரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கர்சனா - சதீஸ்குமார் (பிரான்ஸ்), ஜன்சியா (இலங்கை), கோபிசாந் (கனடா), மைத்ரேயா (இலங்கை), ஆரபி, ஆதிஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்சயா, அபிலாஸ், அஸீஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (11.12.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பொன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 53124) S-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் 84 வது பிறந்த நாள் நினைவும்

மலர்வு 18 - 12 - 1939



உதிர்வு 01 - 12 - 2021

### அமரர் கார்த்திகேசு தம்பிராசா

(இளைப்பாறிய ஆசிரியர், உபஅதிபர், பகுதித்தலைவர்)

**திதி:கார்த்திகைத் திங்கள் அபரபக்க துவாதசி**

ஆண்டுகள் இரண்டு அகன்றாலும் தந்தையே உங்கள்
அன்பின் அரவணைப்பு எம்மனத்துள் என்றும் விட்டகலாது.
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மீளாத்துயரில் மூழ்கிடும்
உங்கள் நினைவுகளும் சிந்தனைகளும் எம்மனத்தே
என்றென்றும் நிலைத்திருக்கும்.
எமது ஈரவிழிநீரால் உம்பாத மலர் இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மகன்மார்: சரஜென்மன், சத்தியவண்ணன், நவநீதன்.
மகள்மார்: உமா, யாழினி.
மருமகன்மார்: சிவகுமார், மகிழ்ராசா.
மருமகள்மார்: அருட்செல்வி, சுதர்சினி, தவமங்களம்.
பேரன்மார்: குகப்பிரியன், தணிகன், இராகுலன்,
விசாகன், பகீத், சஜீபன், கவீன்,
பேர்த்திமார்: விபூஜா, நிரஜா, கஜிதா, இன்பகி,
பேரஜா, மேதவி

தொ.பே.இல:077 645 8440
021 224 1856

மகள்:சிவகுமார் உமா (ஆசிரியை)
மஞ்சத்தடி ஆலய முன் வீதி, இணுவில்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 11 - 1961



மறைவு 06 - 12 - 2023

### தங்கராசா சிவரூபி

யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சிவரூபி அவர்கள் (06.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் கனகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், தங்கராசா (உரிமையாளர் சுஜி தளபாட தொழிலகம்) அவர்களின் அன்பு மனைவியும், வைஷ்ணவி, சுஜீவன் (கனடா), பிரணவன் ஆகியோரின் அன்பு தாயாரும், வாஸ்கரன் (கல்வி அமைச்சு - வடமாகாணம்), ரம்மியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மேனுஷன், வருண்ஜன், வருணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குகபாலன் (கனடா) அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்
077 628 3421(கணவர்)
001 647 961 5966 (மகன்)
076 665 1626 (மருமகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(CS 27094)(K-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 12 - 1943



மறைவு 06 - 12 - 2023

### வேலும்மயிலும் சிவபாதசுந்தரம்

**Velummylum Sivapathasunderam**

(Retired Superintendent of Surveys at Sri Lanka Survey Department)

யாழ். உடுப்பிட்டி இமையாணன் மேற்கு, கும்பவாழியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலும்மயிலும் சிவபாதசுந்தரம் அவர்கள் 06.12.2023 புதன்கிழமை உடுப்பிட்டியில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும், செல்லாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவதேவியின் ஆருயிர்க் கணவரும், ஜெயமோகன் (Oman), ஜெயகீதன் (United Kingdom), ஜெயராகன் (Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, தங்கவேலாயுதம் மற்றும் பரமேஸ்வரி (இலங்கை), புவனேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற தனுசியா, மற்றும் காயத்திரி (Australia) ஆகியோரின் பாசமிகு மாமாவும், காலஞ்சென்ற மயில்வாகனம், மற்றும் வள்ளியம்மை, காலஞ்சென்ற இராசநாயகம், மற்றும் வீரவாகு ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரட்னேஸ்வரன், ஆறுமுகராஜா, செல்வராணி, காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகலனும், ஷைனிகா, ஷர்ஷானி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.12.2023 சனிக்கிழமை பிற்பகல் 04:00 மணிமுதல் பிற்பகல் 9:00 மணிவரை அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்படும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப 10:00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக எள்ளாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நாச்சிமார் கோவில் வீதி,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 27095)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய எரிகொட்டகை திறப்புவிழா அழைப்பு

செம்மணி இந்து மயான சபையின் வேண்டுதலுக்
கிணங்க **புதிய எரிகொட்டகை** ஒன்றை பல இலட்சம்
ரூபா செலவில் அமைத்துத்தந்த
**தியாகி அறக்கொடை நிறுவனர்**
**உயர்திரு. வாமதேவன் தியாகேந்தரன்** அவர்கள்
10.12.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00
மணிக்கு திறந்துவைப்பார்.
தெற்குப் பக்கத்திலுள்ள வளாகத்தில் எரிகொட்டகை புனருத்தாரணத்துக்கும்,
200 மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதற்கும் உதவி வழங்கியுள்ளார்.
நிர்வாகசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் யாவரும் வந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்.

**நிர்வாகசபையினர்.**

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 (பழைய வட்டாரம் 08), கொழும்புத்துறை வீதி, ஆதன இல 77/3 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் க.சிற்றம்பலம் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கனகநாயகம் சண்முகநாயகம் அவர்கள் 29.06.1968ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.C.மகாதேவா முகதாவில் 4388ம் இலக்க நிறைவேற்றுகை உறுதி மூலம் குமாரசாமி சர்மாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தற்போது இந்தியாவில் வசிக்கும் விஜயன் பெண் துஷித்தாவும் தமது அற்றோனி தத்துவகாரர் தியாகராஜசர்மா உமாசுதன் மூலமும் வெளிப்பட்டும் சின்னச்சாமி தர்மலிங்கம் பெண் துஷ்யந்தியும் தியாகராஜசர்மா உமாசுதனும் பெண் காயத்திரியும், குமாரசாமி குருக்கள் காண்டீபனும் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 14.10.2020ம் திகதியிடப்பட்ட 676ம் இலக்க அறுதி உறுதி மூலம் யோகலிங்கம் ஜெயபாலசிங்கத்திற்கு பெண் செல்வவனிதாவிற்கும் வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை:-

"பெரியபுலம் புளியடிஓடை பெரியபுலமும் வளவும் அல்லது சொக்கினிபிள்ளை வளவு" நில.பர.2ம் கிணறும் பயிர்வகைகளும் தற்போது உத்தரவு பெற்ற உலாந்தா P. புஸ்பராஜா என்பவரால் 06.03.2020ல் அளந்து தயாரித்த 6654ம் இல படத்தின்படி நில.பர.1 குளி 16.79 இப்பாகம் குறித்த படத்தில் துண்டு 01 என சுட்டப்பட்டுள்ளது.

**நில.பர.ஒன்று குளி பதினாறு தசம் ஏழு ஒன்பதுக்கும் எல்லைகள்**

கிழக்கு :- 1190ம் இலக்க வரைபடத்தில் துண்டு 02 என காட்டிய பாகம்
வடக்கு :- ஒழுங்கை
மேற்கு :- சிவஞானபோதம் பெண் பிறேமாவின் ஆதனம்
தெற்கு :- 1190ம் இல படத்தில் துண்டு 04 என சுட்டிய பாகம் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை யோகலிங்கம் ஜெயபாலசிங்கமும் பெண் செல்வவனிதா என்பவர் தமது பெயரை ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது யோகலிங்கம் ஜெயபாலசிங்கமும் பெண் செல்வவனிதா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (cr.41293) (N.1)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 ஈச்சமோட்டை வீதி 52 / 16 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை விக்ரர் நேரியஸ் செவந்தா ஜோன்பிள்ளை, ஹயசிந் மாக்கிறேற் ஜிவேந்திராடேவிற் (யோன் பிள்ளை). அன்ரோனியஸ் டினேஸ் யோன்பிள்ளை என்போர் பிரசித்த நொத்தாரிசு அப்பாத்துரை விநாயக மூர்த்தி முகதாவில் 2012.03.21ல் 2160 ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரண நெற்பரப்பு 33 அளவுடைய ஆதனத்தை தமக்கு சொந்தமானது என வெளிப்படுத்தியுள்ளனர் மேற்குறித்த உரிமையாளர்கள் மூவரும் பிரசித்த நொத்தாரிசு வே. அப்பாத்துரை விநாயகமூர்த்தி முகதாவில் 2012.04.20 ம் திகதி 2168 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மேற்படி ஆதனத்தில் விஸ்தீரண நெற்பரப்பு 31 குளி 0.96 அளவுடைய ஆதனத்தை துரைச்சாமி விஜயகாந்தன் என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி இல 252 ஐ சேர்ந்த துரைச்சாமி விஜயகாந்தன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 04.08.2012ம் திகதி 9068 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரண நெற்பரப்பு 2 அளவுகொண்ட ஆதனத்தை லினோ கிறிஸ்ரின் கிறிஸ்தோபர் என்பவருக்கு அறுதிவிற்றுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டுக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "வேலன் புலம் வயல்" உறுதிப்படி நெற்பரப்பு 31 குளி 0.96 ஆனால் நில அளவையாளர் டி. புஸ்பராஜா 13.03.2012 ம் திகதி தயாரித்த 3488 ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 என சுட்டிய பகுதி நெல் பரப்பு 33 அதே நில அளவையாளர் 12.06.2012 ம் திகதி தயாரிக்கப்பட்ட 3488 A நில அளவைப்படத்தில் குறித்த பகுதி துண்டு 1 தொடக்கம் 14 வரை 14. துண்டாக காட்டப்பட்டபடி நிலப்பரப்பு 22 ஆகும். இதில் துண்டு 4 எனும் எண்ணால் சுட்டிய பகுதி நிலப்பரப்பு 2. இந்த நிலப்பரப்பு இரண்டிற்கும் எல்லை

**கிழக்கு** - துண்டு 6 என சுட்டிய ஆதனம்
**வடக்கு** - துண்டு 3 என சுட்டிய ஆதனமும் துண்டு 14 என சுட்டிய பாதை முகப்பும்
**மேற்கு** - காளின் யோன்பிள்ளையின் ஆதனம்
**தெற்கு** - காளின் யோன்பிள்ளையின் ஆதனம்

இதனடங்கலும் இன்னும் முழுக்காணியாலும் விடப்பட்டு முழுக்காணிக்குமாகவும் அமைக்கப்பட்ட பொதுப்பாதையான துண்டு 14 என்னும் எண்ணால் சுட்டிய பாதையால் பிரதான பாதைக்கு போக்குவரத்துச் செய்வதற்கு குறித்த பாதையில் பாவிப்புரித்தும்

தற்போது இவ்வாதனத்தை லினோ கிறிஸ்டின் கிறிஸ்தோபர் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது லினோ கிறிஸ்டின் கிறிஸ்தோபர் என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக் கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**

காணி விற்பனைக்கு
82/5A,
Mt.Lavinia Galle Road,
(Pizzahut இற்கு பின்புறமாக)
தூய உறுதியுடன் கூடிய 9P
வெற்றுக்காணி விற்பனைக்குண்டு
உடனடியாக விற்பனைக்குண்டு
தரகர் தேவையில்லை.
1P-33 இலட்சம்
பேசித் தீர்மானிக்கலாம்
காலி வீதியிலிருந்து 55 மீற்றர் தூரத்தில்
5 வது கடைசி காணி
உரிமையாளர் 077 0817961
076 2920290
077 0765290
+61450506926

# சின்னம் சூட்டும் நிகழ்வு!

கொடிகாமம், டிசெ. 9

கிளிநொச்சி சாரணர் மாவட்டத்தின் திரிசாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் மு.பிறேம்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதிப் பிரதம ஆணையாளர் எம்.எவ்.எஸ்.முகீட் கலந்துகொள்ளவுள்ளார். (ம-159)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 குமாரசாமி வீதி 8 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் செல்லத்துரை பெண் பரமேஸ்வரி என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை வேலுப்பிள்ளை தம்பியையாவும் மனைவி நாகரத்தினமும் கதிர்காமு வேலுப்பிள்ளையும் மனைவி தெய்வானையும் என்போர் பிரசித்த நொத்தாரிசு கி.துரைசிங்கம் முகதாவில் 1958.05.24ல் 9935 ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் விஸ்தீரணம் நிலபரப்பு 4 அளவுடைய ஆதனத்தை சின்னத்தம்பி செல்லத்துரை பெண் பரமேஸ்வரி என்பவருக்கு வழங்கி யுள்ளார்.

மேலும் நித்தியலட்சுமி தம்பையாவும் விக்னேஸ்வரன் தயாநிதிதேவியும் பிரசித்த நொத்தாரிசு V. பொன்னம்பலம் முகதாவில் 2017.07.17 ம் திகதி 1427 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மேற்படி ஆதனத்தில் விஸ்தீரணம் நிலபரப்பு 1 குளி 8.97 அளவுடைய ஆதனத்தை ஜெயகரன் தனலெட்சுமி என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

ஜெயகரன் இராமநாதன் ஜெயகரன் தனலட்சுமி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V. பொன்னம்பலம் முகதாவில் 01.06.2022ம் திகதி 1678 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மற்றும் பிரசித்த நொத்தாரிசு அபர்னா ஜனார்த்தனன் முகதாவில் 14.06.2022 ம் திகதி 1441 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிகள் மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 1 குளி 8.97 அளவுகொண்ட ஆதனத்தை சிவபூமி அறக்கட்டளைக்கு நன்கொடையளித்துள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்னை வடக்கு இறை யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "செம்மணகிடங்கு" கட்டடங்களும் செய்பயிர், வான் பயிர்களும், உறுதிப்படி நிலப்பரப்பு 1 குளி 8.97 நில அளவையாளர் K. கனகசபை அவர்களால் 15.05.2011 ம் திகதி தயாரித்த 4505 / 11 ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 2 என சுட்டிய பகுதி. இந்த நிலப்பரப்பு 1 குளி 8.97 ற்கும் எல்லை


**கிழக்கு** - பரமேஸ்வரியின் வாரிசுகளுக்குரிய ஆதனம்
**வடக்கு** - நடராசாவின் வாரிசுகளுக்குரிய ஆதனம்
**தெற்கு** - அம்பலவாணர் அருளானந்தத்தின் வாரிசுகளுக்குரிய ஆதனம்
**மேற்கு** - துண்டு 1 என சுட்டிய பாகம்

தற்போது இவ்வாதனத்தை சிவபூமி அறக்கட்டளை அமைப்பு தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவபூமி அறக்கட்டளை என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1951



மறைவு
05 . 12 . 2023

## கணபதிப்பிள்ளை பாலேந்திரன்

சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலேந்திரன் கடந்த (05.12.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி ருக்மணி தம்பதியரின் அருமை மருமகனும், பிரேமாவின் அன்புக் கணவரும், விதுஷாயினி, விதுஷன், ஜதீசன், துஷிந்தா, சுதாங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதரன், கார்த்திகா, நித்தியானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷிகாஸ், ஆத்மிகா, அபினாஸ், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், மகேஸ்வரி மற்றும் பரதலிங்கம், காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணமணி, கோமதி, இராசதேவி, காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சிவமலர், சந்திராதேவி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி மேற்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 823 3128, 071 938 6979**

(CS33128) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி தயானி ஜெகநாதன்

(2 ஆம் வருடம் பௌதிக விஞ்ஞானம். யாழ். பல்கலைக்கழகம் 2016 / 17 - 43 ஆம் அணி)



பிறப்பு
29.04.1996

இறப்பு
05.12.2023

45 / 1. அம்மன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி தயானி ஜெகநாதன் கடந்த 05.12.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜெகநாதன் தெய்வச்சிலை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், தேவதாவின் அருமைச் சகோதரியும், ரதீஜனின் அன்பு மைத்துனியும், அதீதாவின் அன்புச் சித்தியும், காலஞ்சென்றவர்களான கரம்பனைச் சேர்ந்த திருமேனி - கனகாம்பிகை, வேலணையைச் சேர்ந்த சிவசாமி (கவிஞர் தில்லைச்சிவன்) செந்தமிழ்ச்செல்வி தம்பதியினரின் அருமைப் பேர்த்தியும், பத்மாவதி - சிவனேசன், காலஞ்சென்றவர்ளான ரேவதி - சுவாமிநாதன், சிவயோகவதி - கருணாகரன் மற்றும் நந்தாவதி - மகேந்திரன், கமலாவதி - லிங்கேஸ்வரன், சித்திராவதி - ஜெகதீஸ்வரன், தயாபரன், ஞானசக்தி, பகீரதன் - சந்திரவதனி, பார்த்தசாரதி - மதிவதனி, கிருபாகரன் - ரமணி ஆகியோரின் மருமகளும், காசிநாதன் - விமலாதேவி, அறிவரசி - ஜெயராஜசேகரன், அன்பரசி - Dr. கணேசலிங்கம் ஆகியோரின் பெறாமகளும், சுயானி - சசிகரன், தீர்த்தா, திரிஷா வினிஷன், தேவந்தி, திவ்யா ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற கிருஷாந்தன் மற்றும் பிரகலாதன், தர்ஷா - கவிதரன், விதுஷா - கங்காசுதன், சிராணி, ஜனனி, நர்மதா - கலாமோகன், Dr.விச்வநேத்திரன் - நிறோஜினி, நிவேதா - நந்தகுமார், வைகுந்தன், பவந்தி, சந்திரகாசன், பிரதீஷா, சிவசங்கர் - திவானி, சிவமைந்தன், தேனுகா ஆகியோரின் அருமை மைத்துனியும், அப்சரா, அட்சயன் ஆகியோரின் அன்பு அத்தையும், நேத்திராவின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

45/1, அம்மன் வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்
076 867 9137

(cs.52453) (N.1)

# மரண அறிவித்தல்

பிறப்பு
12 . 01 . 1945

இறப்பு
06 . 12 . 2023



## மாணிக்கம் உதயகுமார்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர்,
றொட்றி முன்னாள் கிராமக் குழுத் தலைவர்)

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் உரும் பிராய் மேற்கு அன்னாங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் உதயகுமார் அவர்கள் கடந்த 06.12.2023 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் கணபதி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் பாசமிகு கணவரும் சிவகுமார்(சிவன்-கொலண்ட்), மோகனா(ஜேர்மன்), கெங்காதரன் (ஜேர்மன்), கௌரிதரன்(சுவிஸ்), சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இலக்கணகுமார் (ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்), சுப்பிரமணியம்(தயா), குணசிங்கம் (அப்பன்- கனடா), தேவராணி, காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், பவளம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (10.12.2023) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(CS 27318) A-I

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 08 . 1940

மறைவு
08 . 12 . 2023



## திருச்செல்வம் தெய்வானைப்பிள்ளை

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருச்செல்வம் தெய்வானைப்பிள்ளை அவர்கள் நேற்று (08.12.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் பத்தினிப்பிள்ளையின் அன்பு மகளும், திருச்செல்வத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சிவசம்பு நாகமுத்து அவர்களின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் மீனாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் மற்றும் துரைராசா, செல்வராசா ஆகியோரின் அன்புமிக்க சகோதரியும், தவச்செல்வன் (Norway), குகனேசன் (London) சர்வலோஜினி (சாந்தி, சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர், மாவட்ட செயலகம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகுணா, எழிலரசி, DR.K.சந்திரகுமார் (பொது வைத்தியசாலை, வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிராமி, அபிஷா, ரத்வினி, ரதினி, லோஜிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லலப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி வைரவர் வீதி,
சிவன் கோவிலடி,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41170) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### சந்திராதேவி கமலநாதன்

பிறப்பு 15.12.1948 — இறப்பு 07.12.2023

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திராதேவி கமலநாதன் அவர்கள் கடந்த 07.12.2023 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கமலாதேவி சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு பெறாமகளும், ராமலிங்கம் கமலநாதன் அவர்களின் அன்பு மனைவியும், கௌரியின் பாசமிகு தாயாரும், சரோஜினிதேவி (Canada), காலஞ்சென்ற சுசிலாதேவி, விவேகானந்தன் (Swiss), சச்சி தானந்தன் (Swedan), ரவிந்திராதேவி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரன் (Canada), அருணகிரிநாதன் (Swiss), யோகராணி (Swedan), ஆகியோரின் அன்பு மைத்துனியும், முகுந்தன் - ஆனந்தரூபி (Canada), ஜெயஜனனி - ஜெயநேசன் (France), முகிலன் - வத்சலா (Canada), விமலநான் - Kan (UK), வாசுகி - செல்வரேஸ்வரன் (Swiss) ஆகியோரின் அன்புச் சித்தியும், கோகுலன் - இஷல்லா (swiss), ராகுலன் - கிம் (Swiss), ஜாக்கோ (Finland) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிகரன், மணிசங்கரன், எர்வின், கெவின், மார்வின், கீர்த்தனா - கபிலன், ஜனனி, ஷீலா, கீற்றன், அஸ்வினி, லக்ஷனா, லவன், அர்ஜீன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மகிழனின் ஆசை பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக காலை 9.00 மணிக்கு வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று 2.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
Gowri (Daugthter - 9474 2236904)
Vivekanandan (Brother - 4176 377 2695)
Sachithananthan (Brother - 4673 946 0220)
Ravindradevi (Sister - 416 627 3076)

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 21.12.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| சேர்.பொன்.இராமநாதன் அவைகாற்று மற்றும் காண்பிய பீட உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்த மருத்துவ அலகு உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/=இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
08.12.2023

(CR 41198) A-1

### அடையாள...

கொள்ளப்பட்டபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் வழக்கின் பிரதான சாட்சியான கொலையான இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞர் நீதிமன்றில் தோன்றிச் சந்தேகநபர்களை அடையாளம் காட்டினார். இதனையடுத்து நான்கு சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடித்து நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-66-26)

### குழாய்க்கிணறுகள்...

கணிப்பிட முடியாத சூழல் உருவாகியுள்ளது என்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் விலங்கியல்துறை பேராசிரியர் திருமதி ஞானேஸ்வரன் இராஜேந்திரமணி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் குழாய்க் கிணறுகளால் நிலத்தடி நீர் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு குழாய்க் கிணறுகள் ஊடாக வெளியேற்றப்படும் நீரின் அளவைக் கணிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது. யாழ். குடா மூன்று பக்கமும் நீரினால் சூழப்பட்டு ஒரு பகுதியில் நிலத்துடன் இணைக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகிறது. நிலத்தடி தண்ணீரை ஆதாரமாகக் கொண்டே அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எமக்கு இரு கடலேரிகள் மட்டும் உள்ள நிலையில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு நீர் ஏந்துப் பிரதேசங்களை அதிகரிக்கவேண்டும். நீர்நிலைகள் நீரேந்துப் பிரதேசங்களில் உக்காத பிளாஸ்ரிக் பொருள்கள் பொலித்தீன் வகைகள் சேர்வதைத் தடுப்பதற்கு பொதுமக்கள் உரிய வகையில் செயற்படவேண்டும். கழிவு முகாமைத்துவம், கழிவுகளைத் தரம் பிரித்தல் போன்ற செயற்பாடுகளில் பொதுமக்கள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி சூழலுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் செயற்படவேண்டும் - என்றார். (அ-ம-20)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 12 . 1957



மறைவு 06 . 12 . 2023

### சொர்ணேஸ்வரி திருஞானம்

திருநெல்வேலி, முத்துமாரி அம்மன் வீதி, தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணேஸ்வரி திருஞானம் கடந்த (06.12.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், திருஞானம் அவர்களின் மனைவியும், சத்தியவாணி, வாகீசன், ஹஜானி ஆகியோரின் அன்புத் தாயாரும், நிமால் ரவிந்திரன், சாந்தினி, சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுக்ஸ்ஷா, கீர்த்துக்ஸ்ஷா, அஷ்விகா, அஜிசன், அனஷ்கா, அவிஷ்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், லோகேஸ்வரன், ஞானேஸ்வரி, சிவனேஸ்வரி, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், பிரம்மிலா, கந்தையா, ஆனந்தகேதீஸ்வரன், குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், திலானி, சிநேக்கா, விண்ணகன், நவாலினியன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27321) S-1

## மரண அறிவித்தல்



### கதிரவேலு பஞ்சலிங்கம்

(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

யாழ். மானிப்பாய் வடகிழக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்) அவர்கள் கடந்த (06.12.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு தில்லையம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற கந்தமுத்து சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவி (பவுண்) அவர்களின் பாசமிகு கணவரும், அமரர்களான திருநாவுக்கரசு (அதிபர்), கணேசு (அதிபர்), இராசலிங்கம், புனிதவதி மற்றும் சரஸ்வதி, செல்வராணி, தங்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராசா, புஸ்பராசா, சுந்தரலிங்கம், பத்மாதேவி, சந்திராதேவி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகிறதி (தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), வினோபா (பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்), அமலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலநாத் (தேசிய சேமிப்பு வங்கி - பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்), அஜந்தன் (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), கீர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தன்ஜா, லிசானிக்கா, தியான்சி, அயனா, கைலன் (லீமா), ஆதியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மானிப்பாய் வடகிழக்கு மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 380 0076

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடுபாதை...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சென்னையுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என வடக்கு மக்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். அந்த கோரிக்கைக்கு அமைய நாம் எமது செலவில் பலாலி விமான நிலையத்தை அமைத்தோம். எனினும், பலாலி விமான நிலைய ஓடு பாதையை அமைக்க (விரிவுபடுத்த) இன்னும் 16 ஆயிரம் பில்லியன் ரூபா அவசியம். இதற்காக இந்தியாவிடம் உதவி கோரினோம். இன்னும் கிடைக்கவில்லை. கடன் மறுசீரமைப்புப் பிரச்சினை காரணமாக தாமதம் ஏற்பட்டிருக்கும் என நினைக்கின்றேன். எனினும், தனியார் முதலீட்டை கோருவது தொடர்பில் தற்போது பரிசீலிக்கப்பட்டுவருகின்றது.

கே.கே.எஸ். துறைமுகம் தொடர்பிலும் இந்தியா கடன் வழங்கியது. செயற்பாடு ஆரம்பமாகவில்லை. எனவே அதற்கும் தனியார் முதலீட்டைக்கோர எதிர்பார்க்கின்றோம். பலாலி விமான நிலையம் மூலம் 12 மில்லியன் இலாபம் பெற்றுள்ளோம்' - என்றார். (அ-ம-44)

## வடபகுதி...

இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'வடக்கு, தெற்கு என ஊடகவியலாளர்களை நாம் பிரித்துப் பார்க்கவில்லை. ஊடகவியலாளர்கள் பொதுவானவர்கள். ஊ..கவியலாளர்களுக்குத் தேவையற்ற விதத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. அவ்வாறு அழுத்தம் கொடுக்கப்படவும் இல்லை. ஊடகவியலாளர்களால் முன்னெடுக்கப்படும் சில நடவடிக்கைகளுக்கு அவர்கள் நீதிமன்றத்தை, விசாரணையை எதிர்கொள்ள நேரிடின், அதற்கு அரசு பொறுப்புக்கூற முடியாது' - என்றார். (அ-ம-44)

## நெற்பயிர்களில்...

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில் வெண்முதுகு தாவரத் தண்டு தத்தியின் தாக்கம் நேற்றையதினம் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை, பன்றிகெய்தகுளம் பிரதேசத்திலேயே இது அவதானிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உடனடியாக பிரதேச போதனாசிரியரை நாடி பாதிப்பிலிருந்து மீளும் வகையில் உரிய அறிவுறுத்தல்கள் விடப்படுகின்றன. இதேவேளை- இதுவரை கபில நிற தாவர தத்தி அடையாளம் காணப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**மன்னார்**

இதேவேளை - மன்னார் மாவட்டத்தின் நிலைமை குறித்து மன்னார் மாவட்டத்தின் விவசாய உதவிப் பணிப்பாளர் மதனராஜ் குலாஸிடம் தொடர்புகொண்டு கேட்டபோது; மன்னார் மாவட்டத்தில் வெண் முதுகு தாவரத் தண்டு தத்தி மன்னார் மாவட்டத்தின் பண்டிவிரிச்சான் பிரதேசத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் சூரியகுமாரி ஜெகதீஸ்வரியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது; கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் அதிகளவான கபில நிற தத்தி மற்றும் வெண் முதுகு தாவரத் தண்டு தத்தி என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. இதேவேளை - கண்டாவளை மற்றும் பளை பிரதேச செயலர் பிரிவில் மிக குறைந்தளவிலும் இதன் தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த நெற்செய்கையில் 28 ஆயிரத்து 400 ஹெக்ரேயரில் 30 சதவீதம் இந்த நோய் நிலையால் பாதிக்கப்பட்டுள்ளது - என்றார்.

**யாழ்ப்பாணம்**

இதேவேளை- யாழ். மாவட்டத்திலும் நெற்பயிர்கள் மீது கபில நிற மற்றும் வெண் முதுகு தண்டு நிற தத்திகளின் தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளன. தென்மராட்சி பிரதேச வயல் நிலங்களில் பரவலாக இந்தத் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் உதயனுக்கு தெரிவித்தார். தற்பொழுது யாழ். மாவட்டத்தில் நிலவும் மழையுடனான காலநிலையினால் கபில மற்றும் வெண் முதுகு தண்டு தத்திகளின் தாக்கம் மீண்டும் தலைதூக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த நெற்பயிர்செய்கையில் 600 ஏக்கர் வெண் முதுகு தாவர தண்டு தத்தியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதி விவசாயப் பணிப்பாளர் யாமினி சசீலன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை, முள்ளியவளை, கோம்பாவில், கோட்டை கட்டிய குளம், நட்டாங்கண்டல், கணேசபுரம் உள்ளிட்ட பல பகுதிகள் குறித்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

**எவ்வாறு அறிந்துகொள்வது?**

இந்தத் தாக்கத்தினை எவ்வாறு அறிந்துகொள்வது என்ற தெளிவூட்டல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நெற்பயிர்களில் நீர்மட்டத்துக்கு மேல் காணப்படும் தண்டுகளில் இதன் அணங்கு மற்றும் நிறையுடலிகள் இருந்து சாற்றை உறிஞ்சிக் குடிக்கும். இந்த அணங்கு மற்றும் நிறையுடலி வெண்ணிற முதுகுடன் கபில நிறமாகக் காணப்படும். முதலில் நெற்பயிர் ஆங்காங்கே மஞ்சள் நிறமாக மாறும். பின் 2 அல்லது 3 நாள்களில் கபில நிறமாக மாறி தெட்டம் தெட்டமாக வைக்கோல் நிறமாக மாறி எரிந்தது போல் காட்சியளிக்கும். வயலில் பயிர்களை அசைத்து அவதானிக்கும் போது தேங்காய் பூவினை தூவியது போன்று பூச்சிகள் நீரில் மிதக்கும்.

ஆகவே இந்த நிலைமை ஏற்படும் வரை காத்திருக்காமல் உங்கள் நெற்பயிர்களை அவதானித்து தத்திகள் காணப்படுமாயின் பிரதேசத்துக்குப் பொறுப்பான போதனாசிரியரை அணுகி உரிய நடவடிக்கைகளை உடனடியாக விவசாயிகள் முன்னெடுக்கவேண்டும். (அ-ம-125-110)

## இந்திய...

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அனுமதிப்பத்திர முறையின் கீழ் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இது தொடர்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் கடந்த ஆண்டு கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வரையறுக்கப்பட்டளவில் அனுமதிப்பத்திரங்களை இந்திய மீனவர்களுக்கு வழங்குமாறும், அதற்கான கொடுப்பனவைச் செலுத்துவதாகவும் யோசனையொன்றை முன்வைத்தார். எனினும் இந்த யோசனை தொடர்பில் நாம் இதுவரையில் எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை.

ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறக்கூடாது, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசிக்க கூடாது என்பது எமது நிலைப்பாடாகும். ஆனால் இந்திய மீனவர்களுக்கு சற்று இடமளிக்கவேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாகவுள்ளது.

அனைவருக்கும் அனுமதி வழங்காவிட்டாலும், குறிப்பிட்ட சிலருக்கு அனுமதிப் பத்திர முறைமையின் கீழ் அனுமதியை வழங்குமாறும், இதனால் பாதிக்கப்படும் இலங்கை மீனவர்களுக்கு இந்தியாவினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளைக் கொண்டு இழப்பீட்டை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. இந்த யோசனை தொடர்பில் எவ்வித உடனபடிக்கையும் எட்டப்படவில்லை - என்றார். (அ-ம)

## இந்தியத்...

யிட்டுப் போராட்டம் நடத்தப்படும் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் சமாசத் தலைவர் செல்லத்துரை நற்குணம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய றோலர்களால் கடந்த 6ஆம் திகதி மட்டும் சுமார் 60 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மீன்பிடி வலைகள் அறுக்கப்பட்டு நாசம் செய்யப்பட்டுள்ளன. இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் நாம் தொடர்ந்து எச்சரித்து வருகின்றோம். ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் எந்த உணர்வுமற்று இருக்கின்றது. இதனால் நாளுக்குநாள் எமது மீனவர்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எங்கள் கோரிக்கைகள் இதுவரை செவிசாய்க்கப் படவில்லை. இந்த விடயத்தில் எமக்கு நிரந்தரத் தீர்வொன்று வழங்கப்படாவிட்டால் விரைவில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம் - என்றார். (அ-ம-27)

## இலத்திரனியல்...

அனுப்பிவைக்கப்படும் என்றும் இலங்கை மின்சாரசபை மேலும் அறிவித்துள்ளது.

குறித்த இலத்திரனியல் மின்பட்டியலை (ebill) மற்றும் குறுந்தகவல் மூலமாகவோ, அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக REG (இடைவெளி) கணக்கு இலக்கம் என ரைப் செய்து 1987 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவலை அனுப்பி பதிவு செய்யலாம்.

மேலும் EBILL (இடைவெளி) கணக்கு இலக்கம் (இடைவெளி) உங்களுடைய மின்னஞ்சல் என்பவற்றை ரைப் செய்து 1987 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்பி பதிவு செய்யல்லாம். இதுமட்டுமல்லாமல் EBILL.ceb.lk என்ற இணையப் பக்கத்தின் ஊடாகவும் பதிவு செய்யலாம் என்றும் இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. (அ-ம-20)

## வடக்கு...

விடப்பட்டன. இலங்கையில் படுகொலை செய்யப்பட்டுள்ள 45 ஊடகவியலாளர்களில் 43 பேர் தமிழர்கள். இன்னும் நீதி கிடைக்கவில்லை.

'சிரச' மற்றும் யாழ்ப்பாணத்தில் உதயன் ஊடகம் மீதும் திட்டமிட்ட அடிப்படையில் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. உதயன்மீது மாத்திரம் 39 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. உதயனில் எழுவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இழப்பீடுகூட வழங்கப்படவில்லை. இவ்வாறு அச்சுறுத்தலான சூழ்நிலைக்கு மத்தியிலும் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். இது ஊடக சுதந்திரத்தை நசுக்கும் செயல். இவ்வாறான நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.11.2023 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**ஜெகநாதன் சிவதாசன்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (09.12.2023) சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளி கோவிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

குடும்பத்தினர்
077 464 6829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மீதான துஷ்பிரயோகம் கல்லுண்டாயில் விழிப்புணர்வு!

சிறுவர், பெண்களுக்கு ஏற்படும் துஷ்பிரயோகம் தொடர்பாக கல்லுண்டாயில் நேற்று வீடுவீடாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்க ப்பட்டன. இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு வீடுவீடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

(ம-66)

## தேவை

யாழ்நகரில் போன் சொப்பிற்கு

• விற்பனையாளர் • திருத்துனர்

வயது - 18 - 22

சம்பளம் - 25000 - 30000 வரை

தொடர்பு : 074 109 5649

## பணியாளர் தேவை [ஆண்]

கொழும்பில் இயங்கிவரும் பலசரக்கு விற்பனை நிலையத்திற்கு பணியாளர்கள் உடனடி தேவை.

குறிப்பு :- தங்குமிடம், உணவு வழங்கப் படும்.

208 A, Gall Road, Wellawatte.

0777 554 528

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி பொறியியல் பீடத்திற்கு அண்மையில் 400 மீற்றர் தூரத்தில் இரு அறைகளுடனும் இரு குளியலறைகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

* அதில் ஒரு அறை குளியலறையுடன் இணைந்த நிலையில் உள்ளது.

தொடர்புக்கு : 077 936 1568

## காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் இராசவீதிச் சந்திக்கு அண்மித்து உள்ள கிருஸ்ணன் கோயிலுக்கு மேற்குப் புறமாக மானிப்பாய் வீதியிலிருந்து வடக்கே 20 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. நல்ல நீர் ஊற்று உள்ள கிணறு மற்றும் காய்க்கும் 7 தென்னை மரங்கள் உண்டு. வீடு கட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் வியாபார நோக்கத்துக்கும் உகந்த இடம்.

(CS/25104)AH-1

077 310 1357

## பதவி வெற்றிடம்

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள Solar Energy & Electrical சேவையை வழங்கும் Access Energy Engineering (Pvt) Ltd எனும் வியாபார ஸ்தானபனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. Electrician :- NVQ Level 3 (Male)
2. Account Officer :- HNDA, AAT (Female)
3. Marketing Coordinator :- 3 Years Experience (Male)

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:-

021 222 3829/0777528940

Email:accessenergyeng@gmail.com

## காணி விற்பனைக்கு

ராஜபாதை வீதி, கரந்தன் - இராமபிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.

075 970 1948, 077 307 5198

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு முத்தட்டுமட லேன் பகுதியில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நாற்சந்திக்காணி)

தொடர்புகளுக்கு:- 076 4674 313

## தேவை

வீட்டில் இருந்து நெல்லியடியில் முதியவரை பார்பதற்கு பெண் தேவை முன் அனுபவம் அவசியம் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 071 375 9488, 077 611 6551

## வாகனம் விற்பனைக்கு

2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட Py xxxx இலக்கமுடைய பட்டா ரக வாகனம் விற்பனைக்கு

தொடர்பு : 077 886 9583

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளி கருவி 17 லீற்றர் (Sprayer) சில்வர் மற்றும் பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

### ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021

A9, வீதி. எழுதுமட்டுவாள் 070 191 3571

A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917



## மணமகள் தேவை

01. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1984. சுவாதி. BSc Business Managemet,Uk மணமகனுக்கு மணமகள் தேவை.
02. மீசாலை. இந்து. கௌரவகுலம் (V). 1988. சதயம். MSc Engineering, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
03. பண்டத்தரிப்பு. இந்து. கௌரவகுலம் (V). 1985. பரணி. O/L, Receptionist (Hospital) Germany, Vegetarian, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
04. திருகோணமலை. இந்து. கௌரவகுலம். (V). 1984. ரேவதி. Qualified Draftman Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை.
05. கரம்பன். (Jaffna Town) இந்து. கௌரவகுலம். (V). 1988. ரோகினி . BSc Engineering, கனடா. மணமகனுக்கு மணமகள் தேவை.
06. மண்டைதீவு. கோண்டாவில். இந்து. கௌரவகுலம். (V). 1989. மூலம். MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.
07. கோண்டாவில், கல்வியங்காடு. இந்து. கௌரவகுலம் (V). 1990. ரேவதி. Phd in Engineering, அவுஸ்ரேலியா. மணமகனுக்கு மணமகள் தேவை.
08. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc Engineering, அமெரிக்கா மணமகனுக்கு மணமகள் தேவை.
09. அளவெட்டி. சங்கானை, இந்து. விஸ்வகுலம். 1984. திருவோணம். BSc Engineering, லண்டன் மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 30 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 071 173 3911 076 853 5022 076 213 7239

(CS 27307) A-1

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

→ பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.

→ 18 அடி பாதையுடன்.

→ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.

திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.

→ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி

→ நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389,077 986 5457

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1951



மறைவு 07 . 12 . 2023

### சறோஜா சற்குணசிங்கம்

வீமன்காமம் k.k.s வீதி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி மாவிட்டபுரம் தெல்லிப்பளை மற்றும் (இல 46 சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை) வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜா சற்குணசிங்கம் கடந்த (07.12.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு தங்கம்மா மற்றும் இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் **சற்குணசிங்கம் (பொறியியலாளர்) (மின்னியல்) காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபனம் ஏழாலை களவாவோடை கருணாகரப்பிள்ளையார் கோவில் பரிபாலனசபை தலைவர் அவர்களின் அன்பு மனைவியும்,** சயந்தன் (லண்டன்), சதீஷன், சதீனா ஆகியோரின் அன்புத்தாயாரும், பகீரதன் (பதிவாளர் நாயகத்திணைக்களம், கச்சேரி யாழ்ப்பாணம்), ஜனார்த்தனி (லண்டன்), சிந்துஜா (ஆசிரியர், மகாஜனக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜித், சஞ்சித், கங்கேஷ், மதுஷ்சன், கருணி, சுரேன், மேனகா, துர்க்கா, காலஞ் சென்ற மயூரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி (கனடா) தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பொன்னம்மா மாரிமுத்துவின் பெறாமகளும் செல்லையா, செல்லத்துரையின் பெறாமருமகளும் பிறேமா (சுசீலா கனடா) வின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (10.12.2023) இல 46 சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் மாவிட்டபுரம் இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 46, சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

தகவல்: குடும்பத்தினர்

077 715 0356 , 077 990 0041 077 523 4993

(CS 27315) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.